# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ. பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044309

1. District மாவட்டம்: கரூர் | PS காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு | Year ஆண்டு: 2023 | FIR No. மு.த.அ. எண்: 05/AC/2023 | Date நாள்: 20.09.2023

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION | Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: ACT 1988. AS AMENDED | Sections பிரிவுகள்: 7(a)
   (iii) Act சட்டம்: IN 2018 | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல்: 11.09.2023 | Date to நாள் வரை: மாலை 5 மணிக்கு நேரடியாக பார்த்து மாலை 5.30 மணிக்கு செல்போன் மூலம்
   Time Period : நேர அளவு
   Time from நேரம் முதல்: 19.09.2023 | Time to நேரம் வரை: மாலை சுமார் 5.40 மணிக்கு செல்போன் மூலம்.
   20.09.2023 | Time: காலை 11.20 மணிக்கு செல்போன் மூலம்.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 20.09.2023 | Time நேரம்: காலை 09.00 HRS
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 20.09.2023 | Time நேரம்: காலை 09.15 HRS

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS : குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: 1. திண்டுக்கல் தொழிலாளர் நீதிமன்றத்திற்கு வெளியே வாயிலின் பொலிரோ ஜீப்பில் சுமார் 80.km தெற்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி: 2. கைபேசி மூலம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: T. கருப்பசாமி | (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர்: தங்கராஜ்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 1969 | (d) Nationality : நாட்டினம்: இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில்: விவசாயம் | (g) Address : முகவரி: 5/78. வீரகவுண்டன்பட்டி. சேர்வைகாரன்பட்டி, பொன்னிபாடி, கரூர். மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. மெ. க. தங்கையன், தொழிலாளர் துணை ஆய்வாளர் கரூர். மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியில் தட்டச்சு செய்து தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[illegible]
20/9/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
2023

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

20.09.2023 AT. 20.15 HRS.

Name: பெயர் P. தங்கமணி
Rank: நிலை ஆய்வாளர் No. எண் .........
உ. 3.3. பாரிவு
கரூர்.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.05/AC/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் தங்கமணி ஆகிய நான் 20.09.2023 ஆம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது T.கருப்பசாமி, த/பெ.தங்கராஜ், 5/78, வீரகவுண்டன்பட்டி, சேர்வைகாரன்பட்டி அஞ்சல், முள்ளிப்பாடி கிராமம், கடவூர் தாலுகா, கரூர் மாவட்டம். என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்- T.கருப்பசாமி, த/பெ.தங்கராஜ், 5/78, வீரகவுண்டன்பட்டி, சேர்வைகாரன்பட்டி அஞ்சல், முள்ளிப்பாடி கிராமம், கடவூர் தாலுகா, கரூர் மாவட்டம். பெறுநர்- உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, கரூர் மாவட்டம்.

அய்யா, நான் கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், முள்ளிப்பாடி கிராமம், சேர்வைகாரன்பட்டி அஞ்சல் வீரகவுண்டன்பட்டியில் குடியிருந்து வருகின்றேன். எனது வீட்டின் அருகில் உள்ள எனது இடத்தை பெட்ரோல்பங்க் வைப்பதற்காக எனது பங்காளி முறை உறவினரான அண்ணன் மருமகள் திருமதி.கனிமொழி கேட்டு கொண்டதன் பேரில் அவருக்கு குத்தகைக்கு கொடுத்துள்ளேன். அந்த இடத்தில் அவர் அபிராமி ஏஜென்சிஸ் (இந்தியன் ஆயில் கம்பெனி) என்ற பெயரில் உரிமம் பெற்று பெட்ரோல் பங்க் நடத்தி வருகிறோம். அவரது கணவர் சென்னையில் வேலை செய்வதால் அவர் குடும்பத்துடன் சென்னையில் வசித்து வருகிறார். அதனால் நான் பெட்ரோல்பங்கின் அனைத்து நிர்வாகத்தையும் கவனித்து வருகிறேன். கடந்த 24.4.2023-ம் தேதி கரூர் தொழிலாளர் துணை ஆய்வாளர் திரு.தங்கையன் எங்களுடைய பெட்ரோல் பங்கிற்கு வந்து ஒரு பம்ப்பை மட்டும் முத்திரை செய்து கொடுத்துவிட்டு சென்றுவிட்டார். அதன் பின்பு கடந்த 25.5.2023-ம் தேதி மாலை அவர் எங்கள் பெட்ரோல் பங்கிற்கு வந்து கள ஆய்வு செய்வதாக கூறி பெட்ரோல் பங்கில் இருந்த எனது மகன் கிருஷ்ணமூர்த்தி மற்றும் அப்போது பணியில் இருந்த கேஸியர் கோகுலபாண்டி மற்றும் பம்ப் ஆபரேட்டர் கார்த்திக்ராஜன் ஆகியோர்களிடம் நிரப்பப்படாத படிவத்தில் கையொப்பம் பெற்று சென்றதாக எனது மகன் என்னிடம் தெரிவித்தார். நான் அன்றைய தினம் வெளி வேலையாக சென்றிருந்ததால் அதைப்பற்றி கவனிக்கவில்லை. எதற்காக கையொப்பம் வாங்கிசென்றார் என்று எனக்கு அப்போது தெரியவில்லை. அதன்பின்பு கடந்த 27.8.2023-ம் தேதி திண்டுக்கல் தொழிலாளர் நீதிமன்றத்திலிருந்து எனக்கு ஒரு நோட்டிஸ் வந்தது. அதில் வழக்கு எண்.MW 101/2023 நாள். 25.8.2023 என்றும், அதனுடன் தொழிலாளர் துணை ஆய்வாளர் தாக்கல் செய்த மனு எண்.144/2023, நாள்.5.6.2023 மற்றும் எங்களது பெட்ரோல்பங்கில் நாங்கள் பணியாளர்களுக்கு குறைந்த ஊதியம் வழங்கியதாக கணக்கீடு செய்யப்பட்ட 5.6.2023 தேதியிட்ட திருத்திய கணக்கீட்டுபடிவம் ஆகியவை இருந்தது. மேலும் இந்த வழக்கு

சம்பந்தமாக திண்டுக்கல் தொழிலாளர் நீதிமன்றத்தில் 4.9.2023-ம் தேதி காலை 1T.30 மணிக்கு ஆவணங்களுடன் ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. நான் எனது பெட்ரோல் பங்கில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சட்டப்படி ஊதியம் வழங்கி வருவதால் அந்த நோட்டிஸை பார்த்தவுடன் அதிர்ச்சியாக இருந்தது. அதனால் என்னிடம் உள்ள ஆவணங்களை எடுத்து கொண்டு 4.9.2023-ம் தேதி நான் திண்டுக்கல் தொழிலாளர் நீதிமன்றத்தில் ஆஜரானேன். அப்போது தொழிலாளர் துணை ஆய்வாளர் திரு.தங்கையன் அவர்களும் அங்கு இருந்தார். இந்த வழக்கு 11.9.2023-ம் தேதிக்கு வாய்தா போடப்பட்டது. அதன்பேரில் நான் மீண்டும் திண்டுக்கல் தொழிலாளர் நீதிமன்றத்தில்11.9.2023-தேதி ஆஜரானேன். அன்று தொழிலாளர் துணை ஆய்வாளர் திரு.தங்கையன் அவர்களும் நீதிமன்றம் வந்திருந்தார். நான் நீதிமன்றத்தில் இருந்தபோது அன்று மதியம் சுமார் 3 மணியளவில் திரு.தங்கையன் என்னிடம் வெளியேசென்று காத்திருக்கும்படி சொன்னதால் நானும் கோர்ட்டுக்கு வெளியே வந்து எனது பொலிரோ TN47 AX0120 அருகே காத்துக்கொண்டிருந்தேன். அவர் வராததால் நான் எனது செல்போன் எண் 9443207553-லிருந்து அவரது செல்போன் எண் 6380118573-க்கு மாலை சுமார் 4.17 மணிக்கு தொடர்புகொண்ட போது அவர் என்னை காத்திருக்க சொன்னதால் நான் அங்கேயே காத்திருந்தேன். சிறிது நேரத்தில் தொழிலாளர் துணை ஆய்வாளர் திரு.தங்கையன் என்னை செல்போன் மூலம் அழைத்து நான் இருக்கும் இடத்தை உறுதி செய்துகொண்டு அங்கு வந்தார். அப்போது மாலை சுமார் 5 மணி இருக்கும். அவர் வருவதற்குள் நான் எனது வண்டி அருகே நின்றுக்கொண்டு எனது மகனுடன் செல்போனில் பேசிகொண்டிருந்தேன். அப்போது அங்குவந்த தொழிலாளர் துணை ஆய்வாளர் திரு.தங்கையன் என்னிடம் வண்டியில் உட்காருங்கள் பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார். நான் போனை கட் செய்யாமல் அவருடன் பேசிக்கொண்டே எனது பொலிரோ காருக்கு சென்று நான் டிரைவரின் இருக்கையில் அமர்ந்ததும் அவர் முன்பக்க இருக்கையில் அமர்ந்து கதவை மூடிவிட்டார். பிறகு அவர் என்னிடம் எதுக்கு நீங்கள் எல்லாம் கோர்ட்டுக்கு வந்து அலையரீங்க, நான் சொல்ற மாதிரி செய்யுங்க கேஸ முடிச்சுக்கலாம் என்று சொன்னார். நான் என்ன சொல்லுங்க என்றதும் அவர் பணியாளர்களுக்கு கொடுக்க வேண்டிய பணம் ரூ.42,490/- த்தை அவர்களுடைய வங்கி கணக்கில் செலுத்திவிட்டு பணம் செலுத்தியதற்கான வங்கி கணக்கு ஸ்டேட்மெண்ட் நகல், ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல் ஆகியவற்றை எடுத்துகொண்டு அடுத்த வாய்தாவிற்கு வரும்போது பெட்ரோல் பங்கில் வேலை செய்யும் 2 பேரையும கூட்டிக்கொண்டு வர வேண்டும் என்று சொன்னார். அப்போது தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வித்தியாச ஊதியத்தில் 10 மடங்கு தொகை ரூ.4,29,490/- நீதிமன்றத்தால் அபராதம் விதிக்க வாய்ப்பு உள்ளது என்றும், அதனால் மேற்படி அபராதத்தில் 10 சதவீதம் ரூ.40,000/-த்தை அவருக்கு தனியாக கொடுத்துவிட்டால்

வழக்கை எளிதாக முடித்து கொடுப்பதாக சொன்னார். நான் வேலையாட்களுக்கு முறையாக சம்பளம் கொடுத்து வந்ததால், அவரிடம் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்றேன். அதற்கு அவர் 10,000/- குறைத்து கொண்டு ரூ.30,000/- கொடுங்கள் என்று சொன்னார். நான் அதற்கும் முடியாது என்று சொன்னபோது அவர் ரூ.25,000/- கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என்றும் அந்தப்பணத்தை அடுத்த வாய்தாவிற்கு 19.9.2023-ம் தேதி வரும் போது கொண்டு வந்து கொடுக்குமாறு சொல்லிவிட்டு சென்றுவிட்டார். நாங்கள் பேசிய விபரங்கள் அனைத்தையும் எனது மகன் அவருடைய செல்போன் எண் 9626365292-ல் கேட்டுக்கொண்டிருந்தார். பிறகு சிறிது நேரத்தில் மாலை சுமார் 5.30 மணிக்கு மீண்டும் திரு.தங்கையன் அவர்கள் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு 19.9.2023 அன்று கண்டிப்பாக கோர்ட் நடக்கிறது அதனால் பணத்துடன் வருமாறு சொன்னார். பின்பு நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்தேன். அப்போது முறையாக வேலையாட்களுக்கு சம்பளம் கொடுத்து வருவதால் தொழிலாளர் துணை ஆய்வாளர் திரு.தங்கையன் அவர்களுக்கு ரூ.25,000/-ம் பணம் லஞ்சமாக கொடுத்து வழக்கை முடிக்க என் மனது ஒத்துக்கொள்ளவில்லை. வியாபரம் பாதிக்ககூடாது என்பதால் பங்கில் வேலை செய்யும் வேலையாட்களுக்கு அவர் சொன்னபடி தொகையினை வங்கி கணக்கில் அனுப்பி வைத்தேன். அதன்பிறகு 18.9.2023-ம் தேதி மாலை சுமார் 7 மணிக்கு நான் தரகம்பட்டியில் இருந்தபோது, திரு.தங்கையன் மீண்டும் என்னை செல்போன் மூலம் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது மறுநாள் 19.9.2023-ம் தேதி அன்று காலை திண்டுக்கல் வாய்தாவிற்கு போகும்போது அவரும் எங்களுடைய காரிலேயே கூட வருவதற்காக கேட்டார். அப்போது நான் அய்யலூரில் வேலையாக இருப்பதால் அங்கிருந்து அப்படியே வந்து விடுவேன், அதனால் பங்க் வேலை ஆட்கள் காரில் வரும்போது அவர்களுடன் வருமாறு சொன்னேன். அதற்கு அவர் சரி என்று சொல்லிவிட்டு வைத்துவிட்டார். எங்கள் மீது வேண்டுமென்றே பொய் வழக்கு போட்டு அந்த வழக்கை முடித்து கொடுப்பதற்காக ரூ.25,000/- லஞ்சமாக கேட்ட கரூர் தொழிலாளர் துணை ஆய்வாளர் திரு.தங்கையன் என்பவர் மீது திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் புகார் கொடுப்பதற்காக 19.9.2023- தேதி காலை புறப்பட்டு நான் திண்டுக்கல் போனேன். அப்போது திரு.தங்கையன் அவர்கள் காலை சுமார் 8.10 மணியளவில் என்னை செல்போனில் அழைத்து அன்று காலை திண்டுக்கல் தொழிலாளர் இணை ஆணையர் அவர்கள் கரூருக்கே வருவதாகவும் அதனால் என்னை காலை 10 மணிக்கு கரூர் தொழிலாளர்நல அலுவலகத்திற்கு வேலையாட்களுடன் வரும்படி சொன்னார். நான் திண்டுக்கல் வந்த விபரத்தை சொல்லி அங்கு வர லேட் ஆகிவிடும் என்று சொன்னேன். அவர் முடிந்தால் வந்துவிடுங்கள் என்று சொன்னார். எனக்கு ஊரில் வேறு வேலை இருந்ததால் குறிப்பிட்ட நேரத்திற்கு கரூர் வரமுடியவில்லை ஊருக்கு போய்விட்டேன். அதனால் நான் 19.9.2023- தேதி மாலை சுமார் 5.40 மணிக்கு திரு.தங்கையன் அவர்களை செல்போன் மூலம் கூப்பிட்டபோது அவர் என்னிடம், தான்

ஜே.சி உடன் இருப்பதால் 2 நிமிடம் கழித்து பேச சொன்னார். நான் அதேபோல் பேசியபோது என்னிடம் இன்று 20.9.2023- காலை 11.30 மணிக்கு அவர் கேட்ட பணம் மற்றும் ஆவணங்களுடன் என்னை மட்டும் கரூர் தொழிலாளர்நல அலுவலகம் வந்து பார்க்குமாறு சொன்னார். எனக்கு கரூர் தொழிலாளர் துணை ஆய்வாளர் திரு.தங்கையன் அவர்களுக்கு ரூ.25,000/- லஞ்சமாக கொடுக்க விருப்பமில்லை. அதனால் நான் அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுக்கிறேன். இத்துடன் தொழிலாளர் நீதிமன்றம் திண்டுக்கல்லில் இருந்து வந்த அறிவிப்பு மற்றும் தொழிலாளர் துணை ஆய்வாளர் அவர்கள் கையொப்பமிட்ட திருத்திய கணக்கீட்டு படிவம் ஆகியவற்றின் நகலை இணைத்துள்ளேன். நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- XXXXXXXXXX (T.கருப்பசாமி) 20/09/2023.

Sir, Received the complaint on 20.09.2023 at about 09.00 hrs,. a confidential verification was conducted about the demand. The demand of bribe by accused was confirmed through the mobile conversation held between the complainant and the accused at about 11.20 hrs in loud speaker made. The reputation of the accused was verified and found to be bad. The genuineness of complainant was verified and found to be genuine. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.05/AC/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at 20.00 hrs on 20.09.2023. Sd/-(xxxxxxxx) 20.09.2023. P.Thangamani, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original written complaint of Tr.T.Karuppasamy, S/o.Thangaraj, Door No.5/78, Veeragoundanpatty, Servaikaran patty (PO), Mullipady Village, Kadavur Taluk, Karur District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

(P.Thangamani)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.